செ.வெ.எண்:47/2017 நாள்:30.11.2017

**சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்த குறித்து தேர்தல் பார்வையாளர் திரு.டி.என்.வெங்கடேசன்,இ.ஆ.ப.,அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம்**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்த குறித்து தேர்தல் பார்வையாளர் திரு.டி.என்.வெங்கடேசன்,இ.ஆ.ப.,அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 01.01.2018 அன்று மைய நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்த நடைபெறுவது முன்னிட்டு, 03.10.2017 முதல் 30.11.2017 வரை பெறப்பட்ட வாக்காளர் சேர்த்தல் மற்றும் நீக்கல் தொடர்பான நடைபெறும் பணிகளை ஆய்வு செய்வதற்காகவும், அரசியல் பிரமுகர்களுடன் குறைகளைக் கேட்டறிந்தார். கேட்கப்பட்ட கோரிக்கைக்களுக்கு விளக்கம் அளித்தார். தேர்தல் தவிர கேட்கப்பட்ட இதரக் கோரிக்கைக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, தேவகோட்டை சார் ஆட்சியர் திருமதி.ஆஷா அஜீத்,இ.ஆ.ப., சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பெனடிக்ட்தர்மராய், நகராட்சி ஆணையாளர்கள், தேர்தல் பிரிவு வட்டாட்சியர் திரு.ரமேஷ், வட்டாட்சியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.